98



வந்தேமாதரம்.

கோவை தொண்டர்

R. ராம்தாஸ் அவர்களால்

பாடிவரும்

தேசிய கீதங்கள்.

இஃது

கோவை தொண்டர்

T. வேலுக்குட்டி அவர்களால்

பிரசுரிக்கப்பட்டது.

டோரியா பிரஸ், கோயமுத்தூர்.

விலை அணா 1.

O-,1MRD,T
N51
186125

நீங்கள் முக்கியமாக படிக்கவேண்டிய புஸ்தகங்கள்.

சக்ரவர்த்தி-ராஜகோபாலாசாரியாரால் வெளியிடப்பட்ட

விஷபானம் 1. அன்னிய ஆக்ஷி வேண்டாம் 2.

கள் எமன் 3.

விலை பிரதி ஒன்றுக்கு காலணா.

கோவை :—அய்யாமுத்து அவர்களால் இயற்றப்பட்ட,

இராமசாமியும்—கதரும் 1.

பஞ்சமா பாதகங்கள் 2. கள்ளும் கதரும் 3.

இவைகள் கிடைக்குமிடம் :

காங்கிரஸ் காரியாலயம்

கோவை.

வந்தேமாதரம்.

தேசீய கீதங்கள்.

---

1. கொடிவணக்கப்பாட்டு.

(இந்துஸ்தான் பியாக்—தாளம் ஆதி.)

விஜயீவிஷ்வ திரங்காபியாரா
ஜண்டா ஊஞ்சா ரஹே ஹமாரா (விஜ)

ஸதாஸக்த்தி பரஸானே வாலா
ப்ரேமஸுதாஸற ஸானே வாலா
வீரோங்கோ ஹரஸானே வாலா
மாத்ருபூமிகா தனமனஸாரா (விஜ)

ஸ்வந்தரதாஹே பீஷணரணமே
லக கரபடே ஜோஷக்ஷண க்ஷணமே
காம்பேசத்ருதேக கறமனமே
மிடஜாவே பயஸங்கட ஸாரா (விஜ)

இஸஜண்டேகே நீஸ்சேநிற்பய
லேஸ்வராஜ்யயஹ் அவிஷல நிக்ஷ்ய
போலோபாரத மாதாகிஜெய
ஸ்வதந்தரதாஹே தேயோ ஹமாரா (விஜ)

ஆவோபியாரே வீரோங் ஆவோ
தேஷதர்ம பற பலி பலி ஜாவோ
ஏக ஸாத் ஸப் மிலர காவோ
பியாராபாரததேஷ ஹமாரா (விஜ)

(ராகம் புன்னுகவராளி தாளம் ஆதி)

கைராட்னமாம் கைராட்னமாம் நம்
காந்திமகான்சொன்ன கைராட்னமாம் (கை)

வையகத்தில் உள்ளவர்கள் வழங்கிவரும்
நல் கைராட்னமா—கை (கை)

கதர் அணிந்து வெற்றி கொடுத்திடும்
கதர் மிஞ்சி சுதேசி நலம்பெற
சித்தரஞ்சனதாஸர் மகிழ்ந்திடும் (கை)

2097
784.0954

தொகையரு.

ஒரு பருத்திச்செடி மூன்றுசேர் விளையுது
ஒருவருக்கு கால்சேர் போதும்
அதை எடுத்து நூல் நூற்று இடைத்தரித்தால்
ஒருவருடத்திற்குதவுது
மேன்மையுண்டு, லாபமுண்டு, கௌரவமுண்டு,
ரோஷமுண்டு, மானமுண்டு, வீரியமுண்டு
வெட்கமுண்டு, லஜ்ஜையுண்டு, ஈனமுண்டு,
இதைப்பருகுவீரே.

186175

பாட்டு.

வருடமொன்றுக் கருபதுகோடி
மதிப்பு ரூபாய் நமக்கு லாபம்
தரும், ஆண், பெண், நிர்வாணமதை
தடுத்து மானம் கொடுக்கவந்த (கை)

பட்ட துயர்கொஞ்சமா-இதை
பற்றி எழுகையில் பற்றுதே என்னுள்ளம்
கெட்டகொடுங்கோன்மை-என்று
கீழ்மை யடையுமோ ஏழைகள் பங்கினில்
சுட்டவநீதிச்செந்தீ-இந்த
சூளையர் நாட்டினில் சூழ்ந்து பொழுக்தாதோ
எட்டுணையும் இரக்கம்-இவர்கட்க்
இல்லை இல்லை சொன்னேன் தொல்லை அனந்தையும்-சித் (7)

---

௨. வந்தேமாதரத்தின் தத்துவம்

கந்தா காருண்யனே என்றமெட்டு.

வந்தேமாதரமே மணிமந்திரமே
நம்தேசப்பெருமை நமக்கேயுரிமை (வந்)

அனு-பல்லவி எடுப்பு.

விந்தமாகிரிநந்தமாதொரு மேவுசீர்மணியாலயம்
மேலிலங்கிய வானமண்டலம் மேவுமான சுகோதயம்

பாட்டு.

முன்கோபுறநிலையே பணிமாமலையே
அணிசேர்தலைவாசல் அதை ஆரறியார் (வந்)

அ. ப. எ.

அற்புதப் பெறும்கைப்பேரன் கணவாய்க்கிழக்கில் நேபாளமும்
செப்பும் மந்திரமாதியாம் திருதெய்வ மாம்பறிவாரமும்.

பாட்டு.

கெங்கா யமுனை கோதாவரி காவிரியே
பொன்கா நுத்தரியம் புகழ்ச்சாதுரியம் (வந்)

அ. ப. எ.

இந்துமாகடல் அம்மையார் துகில் இரவி சந்திரன் கண்ணதாம்
முந்திமுப்பது கோடிமானிடர் மொய்ப்புகூறுவார் மக்கள்தான்

பாட்டு.

என்னே எழில்கடமை இருக்கும் மகிமை
அன்னை தனக்கடிமை அறிவோர் கடமை (வந்)

அ. ப. எ.

பொன்னுடுமலே முத்துசாமி புலவர்கேசரி மாணவன்
பூமிபாலகன் சாமகீத புராதனம் திகழ்மோகனன் (வந்)

---

4. சிறைவாசப்பாட்டு,

கரும்புத் தோட்டத்திலே என்ற மெட்டு.

காவற்சிறைதனிலே—மக்கள்
கஷ்டப்படுகின்ற கர்மத்தை என்சொல்வேன்
பாவம் பாவம் கொடுமை—கால்கை
பாதித்தெறியும்படிக்கொருசட்டையும்
தலைக்கொருதொப்பியும் தான்—காது
தன்னைமறைக்குந்தறத்திலிருக்குமோர்
சாயலில்வாலிருந்தால்—காட்டில்
தாவுாம்குரங்கென்று சத்தியம் செய்யலாம்—காவ (1)
சோற்றுகதையுரைப்பேன்—அதைச்
சொல்லவும் நாவுதிறம் கெட்டுப்போகுதே
நாற்றத்தண்டுக்கீரை—அதுவும்
நாயிக்கு ஒவ்வாத ராயிக்களியும் தான்
நல்கிவருகின்றனர்—அதுவும்
நல்லவயறுநிரம்பப் பெறுதானல்
நாளுதவறிடினும்—அந்த
நாற்றுத்தண்டுக்கீரை கூட்டுத்தவராது—காவ (2)
உச்சிக்கோ எண்ணெயில்லே—அங்கு
ஒட்டத்தறித்துள்ள மொட்டைத்தலைகள்தான்
வாரத்திற்கோர்க்ஷவரம்—அதுவும்
மண்வெட்டிக்கத்தியால் வரக்குவரக்கென்றே
சோறசிறைத்தெரிவார்—இந்த
துன்பத்தை ஐயையோ என்னென்று சொல்லுவேன்—காவ (3)

வார்டர்ரென்ற ஓர்வகுப்பார்—பட்டி
மாட்டை அடித்தாற்ப்போல் சாட்டைத்தடிகொண்டு
கேடுவிளைத்திடுவார்—எம
கிங்கரர் தானிவர் முன்ஜென்மந்தனில்
செக்கிலிழுக்கவைப்பார்—ராகி
திருகைச்சுழற்றவும் சொல்வாரனுச்சார
கக்கூசெடுக்கவைப்பார்—பாராங்
கல்லைக்கொடுத்துப் பொடிப்பொடியாகவே
மூங்கியுடைக்கச்சொல்வார்—அதை
மூட்டைகட்டிச்சுமை தூக்கியெடுத்தொரு
பக்கம்குமிக்கச்சொல்வார்—தண்ணீர்
பம்படிக்கச்சொல்லி வந்தடிப்பாரையோ—காவ (4)

கான்விக்ட்டுவாடரென்பார்—இரவில்
கால்மணி நேரத்திற் கோர்முறையாகவே
வெல்வெல்லென்பார்—இவர்கள்
ஆரெனில் பூரணம் கூறுவேன் கேளுமின்
ஜென்மக்கைதிகள் தான்—இவர்கள்
சிகப்புக்குல்லாயிட்டு தேர்ந்தனன் மார்கத்தில்
வெள்ளைக்குல்லாய் தறித்தோர்—இவர்கள்
வேடிக்கையாகவே வாடிக்கைதானென்ன—காவ (5)

கருப்புக்குல்லாய்தரித்தோர்—இவர்கள்
களவுசெய்தடிக்கடி கெவர்மெண்டுக்கேடியாய்
தாகல்பத்திரம்படைத்தோர்—இவர்கள்
கவர்மெண்டிற்கே தத்துப்புத்திரராய் பிறந்தார்—காவ (6)

பாட்டைப்பட்டுப்பகலில்—இரவில்
படுக்கையரைக்குள்ளே பாதம்வைப்போமெனில்
மூட்டைக்கடிமயந்தான்—உடலில்
மூன்றரைக்கோடி ரோமத்திற்கே ஒவ்வொன்றாய்
மூட்டைவந்தொட்டிக்கொள்ளும்—அதை
மூடிப்புதைக்க ஓர் வாடக் கருஞ்சம்ளி
நீட்டிப்படுக்கவும் ஓர்—சாக்கு
நீளத்துண்டொன்றுண்டு நிலததில் விரிக்கவே—காவ (7)

தமிழ்நாடு

சூழ்ச்சியிலோர் மனிதன்—கொடும்
சூலப்புண்வாதையில் வீணப்பெண்ணனந்தம்
கேட்கத்தொடங்கினர்ப்போல்—எம
கிங்கரர் வாயெச்சல் பீடித்துண்டுக்காக
நாக்கைசுழற்றுகின்றர்—இன்னும்
நாவில் சொல்லத் தறமல்லா விஷயத்தில்
சேர்க்கைக்கும் உட்படுரார்—இந்த
துன்பத்தை ஐயையோ தெய்வம் பொறுகுமோ—காவ (8)

ஆண்டன்தொளாயிரத்து—முப்பதில்
ஆகஸ்ட்டு மாதம் பதினறும் தேதி
காங்கிரஸ் பிரசங்கத்திலே—அன்னவர்
கைதிசெய்யப்பட்டு கோவைசிறையில் வாழ்ந்த
முத்துசாமி மாணவன்—பூமி
பாலகவி இதைப் பாடினறன்றே—காவ (9)

---

5. மதுவிலக்குப்பாட்டு.

சுருள் சிந்து.

என்று தொலையுமோ இது—கொஞ்சமும்
ஈரமனங்கெட வேறு குணந்தரும் லாகிரிமது
இந்திய நாட்டினிலே—எங்கணும்
ஏகபராபரமாகிய காரண தெய்வம் ஒன்றுண்டு
மூடப்பழக்கவழக்க—அதனை
முன்னிட்டு நம்மூன்னோர் முயன்ற துயன்ற—என்று
கள்ளுக்குடிக்கும் சாமி—பச்சைக்
கஞ்சா அபினி கலக்துண்ணும் கருப்புசாமி
பிள்ளைகறிதின்னும்சாமி—காமப்
பித்துகொண்டுக்குதித்துத்துச் சங்கதி பேசும்சாமி—என்று
சாராயம் உட்கொள்ளும் சாமி—முட்டைக்கோழி
சாவலடைசலில் ஆவல்ப் பெறுகிய சடைசாமி

கட்டுசாராய சாமி—பயாணக்

காட்டைக் காத்திடும் வேட்டைக் காத்தவராயசாமி—என்று

உக்கா அடிக்கும் சாமி—வீதியில்

உருண்டுபுரண்டு திரிந்து கரிந்த உடுக்கை சாமி

தீசட்டி தூக்கும் சாமி—பொல்லாதத்

தேவடியார் மனைப்போய் வெறிதீரும் திருட்டுச்சாமி-என்று

பன்றிகறி தின்னும்சாமி—ஆடுகோழி

பலியோதின்றுமே புலிபோல் நின்றுபதுங்கும்சாமி

குட்டிக்கொடுக்கும்சாமி—நினைத்தவுடன்

கோறினவரம்தந்துக் கூத்தாடும்சாமி—என்று

இந்தியர் ஆதிக்கத்திலே—இத்தனை

எழிவுசாமிகள் அளவுமீறியே இருக்கும்வரை

குடியை ஒழிக்கப்போமோ—நாமே

குடியரசாகியும் முடி அரசாண்மை குறைக்கப்போமோ

பாடிப்புகழ் பாலகவி—பூமி

பாலகவிக்கனு கூலமகுத்துவ பாரதமே—என்று

---

6. பண்டித மோதிலால்நேரு பாட்டு.

(தாரணியில் அன்புகொண்ட என்ற மெட்டு.)

கலியுகக் குபேரனெங்கள் மோதிலால் நேரு

மோதிலால்நேரு பண்டித மோதிலால்நேரு

காலகதி ஆனசெய்தி காரணம் சேரும் (கலி)

பாட்டு.

வலிமைபெறும் புருஷ சிங்கம்

வட இந்தியாவின் தங்கம்

வக்கீல உத்தியோகம் கொண்ட வாக்கியப்ரசங்கம்— (கலி)

பண்டித ஜவர்லால் பாக்கிய தந்தை மோதிலால்

லண்டனரசாங்கம் போற்றும் நாகரீகனுர் (கலி)

தொகையறு:

அலாபாத்தென்னும் நம்பிரயாகை நதிக்கரையோரத்தில்
வாழும் ஆனந்தபவன் மூர்த்தி
அழகாகமுன் கோபுரவாசல் கங்கை நதியோட
பின்வாசல்யமுனை நதிகொண்ட கீர்த்தி

பாட்டு.

பாரத மாதா குமாரன்
பாரிஸ்ட்டர் உத்தியோக தீரன்
பாரத உத்தார பூமி பால கீதனுர் (கலி)

---

7. இந்தியர் துயரம்.

(ஓம் சக்தி ஓம் சக்தி என்ற மெட்டு.)

சொல்லத்தொடங்குமுன்னே
எனக்குள்ளே துக்கம் ஜெனிக்குதந்தோ
எல்லைக்கடங்கவே என்னரும் ஏழை மக்கள் துயரம்
விதிவிதி என்ற சொல்லை
இக்கணமே வெட்டித் தகர்த்திடுவோம்
துதிசொல்லி வாழ்கைசெய்யும்
பிழைப்பதைத் துண்டுத்துண்டாக்கிடுவோம்
கட்டத்துணியுமின்றி
உப்பிட்ட கஞ்சிக்கு நாதி இன்றி
ஒட்டிவயிருலர்ந்தே ஐயையோ
உள்ளம் கொதிக்கின்றனர்
செப்பும் பினுங்குகண்டி
சிங்கப்பூர் சேர்ந்த செட்டால் இடங்கள் செ.
கப்பலேறிக் கடந்து மக்கள்தான்
காலம் கழிக்கின்றனர்
கரும்புத் தோட்டத்திலும்
புதாடர் காப்பித்தோட்டத்திலும்

வருந்திப் பாடுபட்டு மக்கள்தான்
மடிகின்ற மாயமென்னே
தேயிலைத் தோட்டத்திலும்
ரப்பர் பால் சேகரிக்கும் புலத்தும்
வாயில்லாப் பூச்சிகள்போல் ஐயையோ
வாடித் தவிக்கின்றனர்
கற்பும் பலி கொடுத்து
கங்காணிகாரர் தனையடுத்துக்
பொற்பும் வலி குறைந்து
கம்பலை பொங்கிவடிகின்றனர்
எந்தப்பணக்காரர்
இவர்களுக்கென்ன உதவிசெய்தார்
இந்த அரசாங்கம் இவர்களுக்
கென்ன உதவினது
சட்டசபைகளிற் போய்
பிணங்கள்போல் சாய்ந்து நாற்காலிக்குத் தி
பட்டம் பெற்றமெம்பர்கள்
இவர்களுக்கென்ன உதவிசெய்தார்
பணமுடையாருக்கொன்றும்
பணமிலாப் பஞ்சைமக்களுக்கொன்றும்
குணமுடையாருக்கொன்றும்
சட்டதிட்டம் வைத்தது குருட்டுத்தனமிதன்றோ
பூமியெல்லாம் பொதுவே பொருளுடன்
போகமெல்லாம் பொதுவே
சாமியொருவருண்டு உலகினில்
சக்திசொரூபத்திலே

முற்றிற்று.

இரண்டாம் பாகம் வெளிவரும் நாளை எதிர்பாருங்கள்.

விக்டோரியா பிரஸ், கோயமுத்தூர்.

வந்தேமாதரம்.

சுத்த சுதேசி துணிகளை ஆதரியுங்கள்

நேரு சுதேசி இண்டஸ்டிரியல்

ஏஜன்ஸி அவர்களால்

தயாரிக்கப்பட்ட சுதேசி மேட்டி பனியன்களையும்

கைத்தறியால் தயாரிக்கப்பட்ட ஷர்ட்டுகளையும்

வாங்கி உபயோகியுங்கள்.

எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

விபரத்திற்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

நேரு சுதேசி இண்டஸ்டிரியல் ஏஜன்ஸீ

கருப்பகவுண்டன் வீதி,

கோயமுத்தூர்.